செய்தி அறிக்கைகளின் துல்லியத்தன்மையைப் பாதுகாப்பதற்காக நியாயமான முயற்சிகளை மேற்கொள்வது ஊடகவியலாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு நெறிமுறை ஆகும். ஆகையால் அவர்கள் உபயோகிக்கும் செய்தி மூலத்தின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவது மட்டுமல்லாது, பலதரப்பட்ட மூலங்களை உபயோகிப்பதும் முக்கியமானதாகும். எனினும் இந்த விழுமியங்களை பாதுகாப்பதற்கு ஊடகவியலாளர்கள் பலவேளைகளில் முயற்சி செய்யாமை கவலைக்குரிய விடயமாகும். ஏப்ரல் 23 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட மவ்பிம பத்திரிகையின் முன் பக்கத்தில் "கருவின் பேச்சுக்கு சுமந்திரன் கோபம்" என்ற தலைப்பில்
வெளியான செய்தியை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். தாம் இனிமேலும் பாராளுமன்றத்தின் சபாநாயகர் இல்லை என்று கரு ஜயசூரிய அரசியலமைப்பு பேரவையில் ஏற்றுக்கொண்டதாக சுமந்திரன் குற்றம் சுமத்தியதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அவர் ஏற்றுக்கொள்ளாதிருந்தால் பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதற்கு சாதகமாக இருந்திருக்கும் என சுமந்திரன் தெரிவித்ததாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் உள்ளக தகவல் மூலங்களை அடையாளப்படுத்தி பிரசுரிக்கப்பட்ட இந்த செய்தி தொடர்பாக நாம் கரு ஜயசூரியவிடம் வினவியபோது இது தவறான செய்தி என அவர் தெரிவித்தார். இது தொடர்பாக நாம் சுமந்திரனிடம் வினவியபோது, செய்தியில் குறிப்பிட்டதை போன்று அத்தினத்தில் எந்தவொரு குற்றச்சாட்டோ அல்லது கருத்து தெரிவித்தலோ இடம்பெறவில்லை என அவர் தெரிவித்தார். இது தொடர்பாக நாம் பலமுறை மவ்பிம பத்திரிகையைத் தொடர்பு கொண்டபோதும் இது தொடர்பான சரியான விளக்கத்தைப்பெற முடியாமல் போனது. மேலும், இந்த செய்தி முற்றிலும் தவறானது எனவும் வேண்டுமென்றே எழுதப்பட்டது என்றும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய ஏப்ரல் 28ஆம் திகதி அன்று ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்தார். இது பலரின் கவனத்துக்கு கொண்டு வரப்படும் ஒரு விடயம் மட்டுமல்லாமல் அரசியல் ரீதியான பிம்பத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாகும். அதனாலேயே இவ்வாறான செய்திகள் தொடர்பான உண்மைத்தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும். சகல தரப்பினரது கருத்துக்களை ஆராய்வது தொடர்பில் மவ்பிம பத்திரிகை இவ்வாறான செய்தியைப் பிரசுரிப்பதன் மூலம் ஊடக விழுமியங்களை மீறியுள்ளதாக நாம் கூறலாம். தாம் வெளியிட்ட செய்தி சரியானது என்ற நிலையில் மவ்பிம பத்திரிகை இருந்தால் அது தொடர்பான விளக்கத்தைத் தெளிவுபடுத்த வேண்டும். இல்லாவிடின் தவறான செய்தியினை வெளியிட்டமை தொடர்பாக பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு கவலையைத்தெரிவிப்பது இவர்கள் எடுக்கக்கூடிய அடுத்தக்கட்ட நடவடிக்கையாகும். இருந்தபோதும், மே 5

வரையான காலம் வரை இது தொடர்பான திருத்தத்தையோ கவலையையோ, குறிப்பையோ மவ்பிம பத்திரிகை தெரிவிக்காதது கவலைக்குரியது. இது பத்திரிகையின்மீது உள்ள நம்பிக்கைக்கு சவாலாக அமைவது மட்டுமல்லாமல், அவர்கள் ஊடக தர்மங்களுக்கு உட்பட்டு நடவாமையை பிரதிபலிக்கின்றது. இது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?

**#MediaEthicsSL #lka #SinhalaPress #Mawbima**